**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண்.301/2018**

2024–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை வா.சா.1. (1969–ஆம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.புவனேஸ்வரி, மூன்றாம் நிலை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கண்ணகி | சமயம் | : |
| க/பெ | : குணசேகரன் | வயது | : |
| கிராமம் | : | தொழில் | : |
| வட்டம் | : | மாவட்டம் | : |

---

**வா.சா. 1–ன் முதல் விசாரணை**

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். தாவா சொத்தைப் பொறுத்து என் தம்பி சாக்ரட்டிஸ் பெயரில் ஏற்பட்டுள்ள கணினி பட்டா நகல் (பட்டா எண்.2598) **வா.சா.ஆ.1** ஆகவும், 17.05.2018 தேதியில் தாவா சொத்தைப் பொறுத்து என் பெயரில் ஏற்பட்டுள்ள தானசெட்டில்மெண்ட் அசல் **வா.சா.ஆ.2** ஆகவும், தாவா சொத்தைப் பொறுத்து என் பெயரில் ஏற்பட்டுள்ள கணினி பட்டா நகல் (பட்டா எண்.2992) **வா.சா.ஆ.3** ஆகவும், தாவா சொத்தைப் பொறுத்து என் பெயரில் ஏற்பட்டுள்ள அ–பதிவேடு **வா.சா.ஆ.4** ஆகவும், தாவா சொத்தைப் பொறுத்து என் பெயரில் நான் செலுத்திய வரி ரசீது **வா.சா.ஆ 5** ஆகவும், தாவா சொத்திற்கான புலவரைபடம் **வா.சா.ஆ.6** ஆகவும், தாவா சொத்திற்கு அருகில் உள்ள சர்வே எண்.93/2C1க்கான கணினி பட்டா நகல் (பட்டா எண்.2581) **வா.சா.ஆ.7** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கப்படுகிறது.

ஒப்பம்/– திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு,கூ,பொ.)
ஜெயங்கொண்டம்.